Cr. Mis.39(Eng) 663697 – 11 – 2- 70

**DEPOSITION OF WITNESS**

(CHAPTER XXV CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE,
III ADDL. DIST. COURT, TIRUVALLUR AT POONAMALLEE.

**SESSIONS CASE NO.89/2022**

Deposition of PW3 Witness for Defence

Defence Court

Name :Ashok Kumar Caste:

Father's Name :Mathagan Calling :

Village : Religion:

Taluk : Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 on the 25th July 2023.

**( A1 to A3 present )**

**முதல் விசாரணை-**

நான் சென்னை பூந்தமல்லியை அடுத்த புதுசத்திரம் கிராமத்தில் வசித்து வருகிறேன். இவ்வழக்கில் சம்பவத்தில் இறந்து போன அசோக்குமாரை எனக்கு தெரியும். 12/12/2020 அன்று இரவு 09.30 மணியவில் புதுசத்திரம் பேருந்து நிறுத்தம் அருகே நான் கடைக்கு செல்வதற்காக சென்று கொண்டிருந்தேன். அப்போது முத்துவும் அசோக் குமாரும் சண்டை போட்டு கொண்டிருந்தார்கள். நான் கடைக்கு சென்றுவிட்டு திரும்பி வந்துகொண்டிருந்த போது, பார்த்த போது முத்து , ராஜா மற்றும் சதீஷ் ஆகியோர் அசோக் குமாரோடு சண்டை போட்டு ெ காண்டிருந்தார்கள். அப்போது ராஜா அவரது இடுப்பில் வைத்திருந்த கத்தியை எடுத்த அசோக் குமாரை இடது விலாவில் குத்திவிட்டார். அதனால் அசோக் குமார் கிழே விழுந்துவிட்டார். உடனே, நான் அசோக் குமாரின் வீட்டிற்கு சென்று அவரது பெற்றோர்களிடமும் சகோதரர்களிடம் சம்பவத்தை பற்றி கூறினேன். உடனே அசோக் குமாரின் பெற்றோர்கள் மற்றும் சகோதரர்கள் சம்பவ இடத்திற்கு வந்தார்கள். அசோக் குமாரின் அண்ணனின் காரில் அசோக் குமார் திருவள்ளூர் அரசு மருத்துவ மனைக்கு கொண்டு செல்லப்பட்டார். அசோக்

குமாருடன் சண்டை போட்ட ராஜா, முத்து மற்றும் சதீஷ், கத்தியால் குத்திய மேற்கூறிய ராஜா ஆகிய மூவரும் நீதிமன்றத்தில் உள்ளார்கள். அவர்கள் தான் ஆஜர் எதிரிகள். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

(சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய எதிரிகள் தரப்புக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டும், எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் திரு.பி.தயாளன் ஆஜராகி இருந்தும் சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படாததினால் சாட்சியின் சாட்சியம் முடிக்கப்படுகிறது).